பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 22 வியாழக்கிழமை 05.06.2025 | அதிர்வு 306

## டக்ளஸ்–சித்தார்த்தன் சந்திப்பு காலவரையின்றி ஒத்திவைப்பு!



(விரிவான செய்தி 3 ஆம் பக்கம்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# செம்மணியில் திரண்ட உறவுகள் நீதி கோரி கவனவீர்ப்புப் போர்!

- மனிதப் புதைகுழிக்குச் சர்வதேசக் கண்காணிப்பு கட்டாயம் தேவை
- சர்வதேச நியமங்களைப் பின்பற்றி அகழ்வுகள் இடம்பெற வேண்டும்









(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேசக் கண்காணிப்புடனும், சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் இன்று வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் மனிதப் புதைகுழியில் சிசுவின் எலும்புக்கூடு உட்பட 13 எலும்புக்கூடுகள்

02▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சி













## செம்மணியில் திரண்ட...

அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தப் புதைகுழி பாரியதாக இருக்கலாம் எனப் பலரும் அச்சம் வெளியிட்டு வருகின்ற நிலையில், வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் செம்மணி வளைவுக்கு அருகில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேசக் கண்காணிப்புடனும், சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"செம்மணிப் புதைகுழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக்காதே புதைகுழிகளை மறைக்காதே, எங்கே எங்கே உறவுகள் எங்கே, இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணை வேண்டும்" என எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளைத் தாங்கி நின்றவாறு போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

இதில் வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் பின்னர் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கமாக, யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பாக எமது தீவிர கவனத்தையும், நிலைப்பாட்டையும் வெளியிடுகின்றோம்.

ஏற்கனவே தமிழர் தாயகப் பரப்பிலும் ஸ்ரீலங்காவிலும் 22 க்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மன்னார் ச.தொ.ச. வளாக மனிதப் புதைகுழி, மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளின் அகழ்வுகள் நிறைவு பெற்று மிக அண்மைய காலமாகத் தொடர்சியாக வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றதே தவிர இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மை இன்னும் உரிய வகையில் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்படவில்லை. எனவேதான் நாங்கள் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்தவர்களாகத் தொடர்சியாக இவ்வாறாகக் கண்டுபிடிக்கப்பட்டு அகழப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச கண்காணிப்பையும், சர்வதேச நீதிப் பொறிமுறையையும் வலியுறுத்தி வருகின்றோம்.

தற்போது வரை செம்மணி சித்துப்பாத்தில் மீட்கப்பட்ட அல்லது அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்கள் எண்ணிக்கை 13ஐத் தாண்டியுள்ளது. இதில் சிறு குழந்தைகளின் உடல எச்சங்களும் அடங்குவதாக அறிகின்றோம். மிகவும் கொடூரமான முறையில் ஒன்றன்மீது ஒன்றாகப் பலர் கொன்று புதைக்கப்பட்டிருப்பதாக இந்தப் புதைகுழி அகழ்வு வெளிப்படுத்துகின்றது.

ஒரே இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மனித உடல்கள் கண்டெடுக்கப்படும் போது, அந்த இடம் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப "மனிதப் புதைகுழி" என அடையாளப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம். எனவே, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான அகழ்விடத்தை உடனடியாக ஒரு "மனிதப் புதைகுழியாக" பிரகடனம் செய்யுமாறும், அதன் அடிப்படையில் அகழ்வுப் பணிகளை மேற்படி மயான வளாகம் முழுவதிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் விரிவுபடுத்துமாறும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலும், செம்மணி முழுவதும் போர் இடம்பெற்ற கடந்த காலங்களில் பலர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக கிரிசாந்தி குமாரசாமி என்ற பாடசாலை சிறுமியின் கொலை தொடர்பான நீதி மன்றங்களில் இடம்பெற்ற வழக்குகளில் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஆணைக்குழுக்களுக்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அகழ்வு நடவடிக்கை ஒரு தனிப்பட்ட சம்பவமாக அல்லாமல், பெரும் அளவிலான அடடூழியங்கள் இடம்பெற்ற தரவுகளை வெளிக்கொணரும் முக்கியமான வழியாக காணப்பட வேண்டும். செம்மணியின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறு வெவ்வேறு மனிதப்புதைகுழிகள் இருக்கலாம் என நாங்கள் நம்புகின்றோம்.

ஆகவே,

1) செம்மணி சித்துப்பாத்தில் இடம் பெறும் அகழ்வு நடவடிக்கையை மனிதப் புதைகுழி விசாரணை என அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க கோருகின்றோம்.

2) அகழ்வுப் பணிகளைச் சர்வதேச நிபுணர்கள், சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன், சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப முன்னெடுக்குமாறு கோருகின்றோம் .

3) மனிதப் புதைகுழி தொடர்பான அனைத்து ஆதாரங்களும் பாதுகாக்கப்பட்டு, வெளிப்படைதன்மையோடு அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுகின்றோம்.

4) மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையை ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுதந்திரமாக மட்டுப்படுத்தல்கள் இன்றி அறிக்கையிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5) எதிர்வரும் மாதங்களில் இலங்கைக்கு வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வடக்குக்குப் பயணம் செய்து செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்டு நீதியை நிலைநாட்டுவதற்கு உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா? வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணைகள் மூடி மறைப்புக்கள் இன்றி வெளிப்படைத்தன்மையோடு சர்வதேச சமூகத்தின் பங்கேற்போடு இடம்பெறும்போதுதான் வெளிப்படும் என நாங்கள் வலுவாக நம்புகின்றோம்."

– என்றுள்ளது.



# டக்ளஸ் - சித்தார்த்தன் சந்திப்பு காலவரையின்றி ஒத்திவைப்பு!

(பிரபாகரன் டிலக்சன்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் சங்கு - சைக்கிள் கூட்டணி தரப்பின் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு மீண்டும் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கொள்கை ரீதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் அந்தப் புதிய கூட்டின் முக்கியஸ்தர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெறவிருந்த நிலையில் அந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டு இன்று நடைபெறவிருந்தது.

இந்நிலையில் குறித்த சந்திப்பு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இன்று கூட்டாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு திட்டமிட்டபடி இன்று மாலை இடம்பெறும் சென்று சி.வி.கே.சிவஞானம் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

# குருந்தூர்மலையில் கைதாகிய இரு விவசாயிகளும் விடுதலை!

## முல்லைத்தீவு நீதிமன்றத்தால் வழக்கும் தள்ளுபடி



(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம், குருந்தூர்மலை பகுதியில் விவசாய நடவடிக்கைகளின் ஈடுபட்டிருந்தவேளை கைது செய்யப்பட்ட இரண்டு விவசாயிகளும் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு விவசாயிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்ச்சியாக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர்களான விவசாயிகள் இருவரையும் வழக்கில் இருந்து விடுவித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் கட்டளையாக்கியுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் தனது கட்டளையில், "மேற்படி சந்தேகநபர்கள் மீது வழக்கைத் தொடர்ந்து நடத்தக்கூடிய அடிப்படை முகாந்திரங்கள் இல்லை. குறித்த பிரதேசம் இன்னமும் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பிரதேசம் என வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்பதை வழக்குத் தொடுநர் தரப்பே ஏற்றுக்கொண்டுள்ளது." - என்று குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் இன்று முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தின் பத்துக்கும் அதிகமான சட்டத்தரணிகள் சந்தேகநபர்கள் சார்பாகத் தோன்றி வாதிட்டிருந்தார்கள்.




# சி.வி.கே.-டக்ளஸ் சந்திப்பு

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பேச்சு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பற்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியிடம் நேரடியாகச் சென்று இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவைக் கோரியுள்ளது.

நேரடியாகவே சந்தித்து ஆதரவு கேட்ட தமிழரசுக் கட்சியின் இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் யாழ். நகரில் உள்ள ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகத்துக்கு இன்று மாலை நேரில் சென்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஈ.பி.டி.பி. ஆதரவை வழங்க வேண்டும் என்று அதன் செயலாளர் நாயகத்திடம் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் கோரியுள்ளார்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியே நேரில் வந்து எம்மைச் சந்தித்துக் கலந்துரையாடி ஆதரவை வழங்குமாறு விடுத்துள்ளகோரிக்கையைஈ.பி.டி.பி.பரிசீலிப்பதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.







# தியாகி பொன். சிவகுமாரனின் 51 ஆவது நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முதல் தியாகி பொன். சிவகுமாரனின் 51 ஆவது நினைவு தினம் இன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள பொன். சிவகுமாரனின் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சுடர் ஏற்றப்பட்டு, பொன். சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தியாகி பொன். சிவகுமாரனின் சகோதரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி

வடக்கில் ஒவ்வொரு ஆண்டும் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. தரம் ஒன்று அனுமதிக்காக வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. இது எமக்கு ஆபத்தான நிலைமை. அனைவரும் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அபாய எச்சரிக்கையோடு கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பங்குபற்றி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

வடக்கு ஆளுநர் குறிப்பிடும் இந்தப் பிரச்சினை வடக்குக்கு மாத்திரம் தனியானது அல்ல. ஒட்டுமொத்த இலங்கைக்கும் உள்ள பிரச்சினைதான்.

அகில இலங்கை ரீதியில் வருடாந்தம் முதலாம் தரத்துக்கு அனுமதி பெறும் சிறார்களின் எண்ணிக்கை சராசரியாக 10 ஆயிரத்திற்கும் அதிகமாகக் குறைந்து வருகிறது.

நாட்டில் குழந்தைப் பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளமையினால் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 50 ஆயிரமாக குறைவடைந்துள்ளதாக 2023 டிசம்பரில் அப்போதைய கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் குடும்ப கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் குழந்தை பிறப்பு வீதம் குறைய, பாடசாலைகளுக்கு அனுமதி கோரும் சிறார்கள் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது.

கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட காரணத்தினால், மக்கள் ஜனத்தொகை பெருக்கமும் அக்காலகட்டத்தில் மேலும் வீழ்ச்சியுற்று இருக்கும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

அதன் விளைவு பெரும்பாலும் அடுத்த ஆண்டில் தரம் ஒன்றில் அனுமதி பெறும் மாணவர்களின் தொகை மேலும் எண்ணிக்கை வீழ்ச்சியை தரும். இதனால் ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஆரம்ப பாடசாலை அனுமதி குறைந்து, பல பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி பதியப்படும். அதனால் பல பாடசாலைகள் மூடப்படுவது வருடாந்த நிகழ்வாக - தவிர்க்க முடியாத கட்டாயமாக - அரங்கேறும்.

ஆனால், ஆரம்பக் கல்வியுடன் அல்லது இரண்டாம் நிலை க்கல்வியுடன் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறும் இடைவிலகல் அல்லது மாணவர் எண்ணிக்கை குறையும் நிலைமை ஏற்பட்டால் அது விசேட கவனிப்புக்கும் நடவடிக்கைக்கும் உரிய விடயம் என்பதை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆயினும் ஏனைய தென்கிழக்காசிய நாடுகளில் பொதுவாக மாணவர்கள் இடைவிலகலுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நிலைமை திருப்திக்கு உரியது என்று யுனெஸ்கோவின் வருடாந்த ஆய்வு அறிக்கைகள் குறிப்பிட்டு இருக்கின்றன எனத் தெரிகிறது.

எது, எப்படியாயினும், தமிழர்களைப் பொறுத்தவரை கல்வியே அவர்களின் அழிவற்ற செல்வம். அதுவே அவர்களை நிரந்தரமாக பாதுகாத்து, சமூக உயர்வை - வாழ்க்கை மேம்பாட்டை - தரக்கூடியது.

அத்தகைய கல்வியை நமக்கு வழங்குகின்ற கல்விக்கூடங்கள் மாணவர்கள் இன்றி மூடப்படுகின்ற நிலைமை ஏற்படாமல், இந்த கல்விக் கூடங்களை உச்ச அளவுக்கு பயன்படுத்துகின்ற பொறிமுறையை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமாகும்.

## திமிலிக்கண்டை ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம்

வடமராட்சி, அல்வாய் கிழக்கு, அத்தாய் தாமன் தோட்டம் திமிலிக்கண்டை அருள்மிகு ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்ச குண்ட பக்ச மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.26 மணி முதல் 8.28 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேகத்தை புலோலி ஆலடிப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு பிரதிஷ்டா ஞானபூஷணம் சிவஸ்ரீ சோமதுஷ்யந்தக்குருக்கள் ஆலய பிரதம குருக்கள் நித்திய சுடர் சோமசுந்தரக் குருக்களின் உதவியுடன் நடத்தி வைப்பார்.

# கரவெட்டி மு. சிவசிதம்பரத்தின் நினைவு தினம் இன்று அனுஷ்டிப்பு



தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உப சபாநாயகரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் கரவை மு. சிவசிதம்பரத்தின் 23 ஆவது நினைவு தினம் இன்று வியாழக்கிழமை கரவெட்டியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இன்று காலை நெல்லியடி பஸ் நிலைய சதுக்கத்தில் அமைந்துள்ள அமரர் மு. சிவசிதம்பரத்தின் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்தில் மக்கள் ஒன்று கூடி அன்னாருக்கு அஞ்சலி தெரிவித்தினர்.

அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து நினைவு கூர்ந்தனர்.





# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தியாகி சிவகுமாரனின் நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழினத்தின் விடுதலைக்கான முதல் தற்கொடையாளர் தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இன்று மதியம் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தியாகி பொன். சிவகுமாரனின் திருவுருவப் படத்துக்கு மாணவர்கள் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

தியாகி பொன். சிவகுமாரன், தமிழ் மாணவர்களுக்குத் தரப்படுத்தல் மூலம் திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்காகவும் கிளர்ந்தெழுந்து ஆயுதம் ஏந்திப் போராடினார்.

அதனால் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பொன்.சிவகுமாரன் கடந்த 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி யாழ். உரும்பிராய் பகுதியில் பொலிஸாரின் சுற்றிவளைப்பினுள் சிக்கிக் கொண்டபோது சயனைட் அருந்தி தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக சயனைட் அருந்தி உயிர் நீத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.












## மீனவர் மீதான சூட்டுக்கு நீதி வழுங்கக் கோரி

# திருகோணமலை - நிலாவெளி வீதியை மறித்து திருக்கடலூர் மீனவர் கவனவீர்ப்பு!

**(எஸ்.கீதபொன்கலன், ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை - நிலாவெளி வீதியை மறித்து திருக்கடலூர் பிரதேச மீனவர்கள் இன்று (05) கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புல்மோட்டையில் இருந்து மீன் பிடிக்கச்சென்றவர்கள் மீது கடற்பரப்பில் கடற்படையினர் சூட்டுச் சம்பவத்தை மேற்கொண்டதைக் கண்டித்தும் நீதி கிடைக்கவேண்டும் என்று தெரிவித்தும் இந்தக் கவனவீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உரியவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துக் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது பல வசாகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் ஒரு சில மணி நேரம் அந்தப் பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

மீனவனின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையா?,மீனவனின் நிலமையை பார் உட்பட பல வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

பல நூற்றுக் கணக்கான மீனவக் குடும்பங்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.










# பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலைக்கு அதிபரை நியமிக்குக!

## கோரிக்கை விடுத்துள்ளனர் பெற்றோர்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பெற்றோரும் பழைய மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (03) முழுநாளும் மாணவர்களுக்கு எந்தப் பாடங்களும் நடத்தப்படவில்லை.

இந்த நிலையில் இது தொடர்பாக கடும் விசனம் வெளியிட்டுள்ள பழைய மாணவர்களும் பெற்றோரும் தமது பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை கடந்த ஒரு வருட காலமாகப் பதில் அதிபருடனேயே இயங்கி வருகின்றது. இதனால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் ஒழுங்கு, கட்டுப்பாடுகளும் சீர்குலைந்துள்ளன என்று பெற்றோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தமது பாடசாலை தரம் 2 வகையைச் சேர்ந்தது எனவும் தற்போது தரம் 3 ஐச் சேர்ந்த அதிபர் ஒருவரே பதில் அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பெற்றோரும் பழைய மாணவர்களும் பாடசாலைக்கு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பிவைத்தனர் எனவும் கூறுகின்றனர்.


எனினும், இதுவரை தமது பாடசாலைக்குப் பொருத்தமான அதிபரை நியமிப்பதற்கு எந்த அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலையின் தரம் 3 ஆசிரியை ஒருவர் மாணவனைத் தண்டிக்கும் நோக்கில் நெருப்பு எறும்புக்குள் முழந்தாளிட்டு இருத்தியமை குறித்து பழைய மாணவன் ஒருவர் தமது முகப்புத்தகத்தில் பதிவேற்றினார். அதை அடுத்து அவர் நேரே வந்து தன்னிடம் மன்னிப்புக் கேட்கும் வரை மாணவர்களுக்கு கற்பிக்க மாட்டார்கள் என்று பதில் அதிபரும் ஆசிரியர்களும் தெரிவித்து நேற்று (03) முழுநாளும் பணிப் புறுக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறவில்லை.

ஆசிரியர்களின் பணிப் புறக்கணிப்பு குறித்து கடும் விசனம் வெளியிட்டுள்ள பெற்றோரும் பழைய மாணவர்களும் நினைத்த மாத்திரத்தில் முழு நாளும் பணிப்புறக்கணிப்பு செய்வது எந்த வகையில் நியாயமானது? பணிப் புறக்கணிப்புக்குக் கல்வி அதிகாரிகள் அனுமதி வழங்கினார்களா எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் தமது பாடசாலைக்கு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமித்து மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை சீரமைக்குமாறும் பெற்றோர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.




# கிண்ணியா கடற்கரையில் சுத்தம் செய்யும் பணிகள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இடம்பெற்று வரும் சுற்றாடல் வாரத்தில் கரையோர பகுதிகளில் காணப்படும் பிளாஸ்டிக் பொருள்களை அகற்றும் சிரமதான நிகழ்வு நேற்று (04) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி தலைமையில் இடம்பெற்றது.

பைசல் நகர், அண்ணல் நகர், மாஞ்சோலை சேனை, ரஹ்மானிய நகர் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கிண்ணியா சுகாதார வைத்திய பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். அஜித், கிண்ணியா நகர சபையின் செயலாளர் எம். அனிஷ், கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஏ. முஹம்மது இம்ரான், கடற்படையினர், பாதுகாப்பு படையினர், கிண்ணியா நகர சபை உத்தியோகத்தர்கள் , கிண்ணியா சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



## சவூதி அரபியா - சுற்றுச்சூழல்:

# நிலைத்த எதிர்காலத்துக்கான உறுதியான அர்ப்பணிப்பு!

ஒவ்வொரு ஆண்டும், ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினமாக கொண்டாடப்படுகிறது. இது நமது புவியின் யதார்த்தத்தைப் பற்றி சிந்திக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையைப் பாதிக்கும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு உலகளாவிய சந்தர்ப்பமாகும்.



காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதர்

இந்தச் சந்தர்ப்பத்தில், சுற்றுச் சூழல் நீதியின் கொள்கைகள் மற்றும் சவூதி விஷன் 2030 இன் இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு லட்சிய தேசியத் தொலைநோக்கு கட்டமைப்புக்குள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கும் சவூதி அரேபியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை நான் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

அதிகரித்து வரும் சுற்றுச் சூழல் சார்ந்த தீவிர சவால்களையும், அவற்றைத் தீர்க்க வேண்டும் என்பதற்கான அவசியத்தையும் கண்டறிந்து, தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச நிலைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண, சவூதி அரேபியா, சுற்றுச் சூழல் பாதுகாப்பை முழுமையான அபிவிருத்தி மாற்றத்தின் மையமாகக் கொண்டு, இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும், காலநிலை மாற்றம் மற்றும் வரண்ட நிலமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கும், மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயற்பட்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், "சவூதி பசுமை முனைவு" (Saudi Green Initiative)" ஒரு முன்னேற்றமான மாதிரியை வெளிப்படுத்துகிறது. இது, நாட்டுக்குள் பத்து பில்லியன் மரங்களை நடுதல், பசுமைப் பரப்புகளை அதிகரித்தல், மற்றும் 2030 ஆம் ஆண்டுக்குள் 278 மில்லியன் தொன் கார்பன் வாயு வெளியீட்டை குறைத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. இந்த முயற்சி, "மத்திய கிழக்கு பசுமை முனைவு" டன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதில், 30 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து, மத்திய கிழக்கு பகுதி முழுவதிலும் 50 பில்லியன் மரங்களை நடுவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறது. இதன் பரப்பு மற்றும் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் முயற்சிகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

இந்த முயற்சிகள், சுற்றுச் சுழற்சி கார்பன் பொருளாதார அணுகுமுறையின் கீழ், 2060 ஆம் ஆண்டுக்குள் சுற்றுச் சூழலுக்கு ஊடுருவும் கார்பன் வெளியீடுகளை பூச்சியத்துக்கு கொண்டு வர வேண்டும் என்ற சவூதி அரபிய அரசின் நோக்கத்துடன் முழுமையாக ஒத்துப் போகக் கூடியதாக அமைகின்றன. இந்த அணுகுமுறை, 2020 ஆம் ஆண்டு சவூதி அரபியா ஜி 20 இன் தலைமைப் பொறுப்பேற்ற போது அந்த நாட்டின் வழிகாட்டுதலின்படி ஆதரிக்கப்பட்டது. இதில், கார்பன் வெளியீட்டைக் குறைக்கும் (mitigation), மீள் பயன்படுத்தும் (reuse), மீள்சுழற்சி செய்யும் (recycling), மற்றும் அகற்றும் (removal) தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்தச் சூழலில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் சகாகா சூரிய ஒளி மின்சக்தி திட்டம் (Sakaka Solar Energy Project), துமத் அல்-ஜண்டல் காற்றழுத்த மின்சக்தி திட்டம் (Dumat Al-Jandal Wind Energy Project), மற்றும் எதிர்கால சுற்றுச் சூழலுக்கு உகந்த நகரத் திட்டங்களான NEOM மற்றும் The Line போன்றவற்றைத் தொடங்குவது போன்ற பல மூலோபாயத் திட்டங்களை இராச்சியம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இவை சுத்தமான எரிசக்தி மற்றும் ஸ்மார்ட் இயக்கம் ஆகியவற்றின் அடிப்படை

தொடர்ச்சி ▼

# நிலைத்த எதிர்காலத்துக்கான உறுதியான அர்ப்பணிப்பு!

தொடர்ச்சி ▲

யில் நிலையான நகரங்களுக்கான உலகளாவிய மாதிரியைப் பிரதிபலிக்கின்றன.

2030 ஆம் ஆண்டுக்குள், மின்னுற்பத்தியின் 50 வீதத்தைப் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களில் இருந்து பெறும் இலக்கை நோக்கி சவூதி அரபியா முன்னேறிச் செல்லுகிறது. இது, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார துறைகளில் முழுமையான மாற்றத்தை அடைவதற்கான சவூதியின் முயற்சியை பிரதிபலிக்கிறது. இந்த முயற்சிகள், கடந்த மூன்று ஆண்டுகளில் தலா எரிசக்தி பயன்பாட்டை 7 வீதமாகக் குறைக்கும் வகையில் உதவியுள்ளன. மேலும், பல்வேறு துறைகளில் தண்ணீர் மற்றும் எரிசக்தி பயன்பாட்டு திறனையும் மேம்படுத்தியுள்ளன. இது சவூதியின் சுற்றுச்சூழலுடன் ஒன்றிணைந்து செல்லும் வளர்ச்சியின் நோக்கில் ஒரு முக்கிய முன்னேற்றமாகும்.




இந்த சுற்றுச் சூழல் சார் முயன்சிகளின் இன்னொரு ஆரம்ப கட்டமாக சவூதி அரபியா சுற்றுச்சூழல் துறையை மறுசீரமைத்து பல முக்கிய நிறுவனங்களை நிறுவியுள்ளது. இதில் முக்கியமானவையாக தேசிய சுற்றுச்சூழல் இணக்கமான பணிநிலை மையம், தேசிய செடிகள் வளர்ச்சி மையம், மற்றும் தேசிய வானிலை மையம் போன்றன அடங்குகின்றன.

மேலும், சுற்றுச்சூழல் முறைமைகளை மேம்படுத்தும் தேசிய யோசனைக்கு (National Environmental Strategy) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக, உயிரினங்கள் வாழும் பருவ அமைப்புகளை பாதுகாப்பது, காற்றின் தரத்தை மேம்படுத்துவது, குப்பை மேலாண்மை திறனை உயர்த்துவது, மற்றும் சுற்றுச் சூழல்காக்கப்பட்ட பகுதிகளின் விகிதத்தை அரசின் மொத்தப் பரப்பளவில் 30 விதத்தைக் கடந்த அளவுக்கு உயர்த்துவது போன்றன அடங்குகின்றன. ரியாத் போன்ற முக்கிய நகரங்களில், நகராட்சி குப்பை மறுசுழற்சி விகிதம் 35 வீதத்தை விட உயர்ந்துள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டிலிருந்து, சுமார் 2,00,000 ஹெக்ரெயர் நிலப்பரப்பு சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் புனரமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சவூதி அரபியாவின் முயற்சிகள் தேசிய மட்டத்தில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் மற்றும் நட்பு நாடுகளுக்கும், குறிப்பாக ஆபிரிக்க மற்றும் ஆசிய பகுதிகளில் இருக்கும் நாடுகளுக்கும் விரிவடைந்துள்ளன. இந்த முயற்சிகள் வழியாக வரண்ட நிலமாக்கலை எதிர்க்கும் திட்டங்களுக்கு நிதி உதவி, தண்ணீர் மேலாண்மை திறன்களை மேம்படுத்தும் பயிற்சி மற்றும் வசதிகள் உருவாக்கல், சுற்றுச்சூழல் சார் கண்டுபிடிப்புகளுக்கான தொழில்நுட்ப உதவித் தொகைகள் வழங்கல் மற்றும் பசுமை காலநிலை நிதியத்தின் (Green Climate Fund) மற்றும் உலக சுற்றுச்சூழல் வசதியின் (Global Environment Facility) வாயிலாகக் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப மாற்றம் செய்யும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கல் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

சவூதி அரபியா பல்வேறு சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார் சர்வதேச ஒப்பந்தங்களில் மிக ஆர்வமாக பங்கேற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அவற்றுள் முக்கியமாக, ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மேலமைப்பு உடன்படிக்கை, பாரிஸ் காலநிலை ஒப்பந்தம், உயிரியல் பல்வகைமைக்கான ஒப்பந்தம், மற்றும் ஓசோன் படலத்துக்குச் சேதம் விளைவிக்கும் பொருள்கள் தொடர்பான மான்ட்ரியால் நெறிமுறை (Montreal Protocol) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக இந்த நெறிமுறையின் கீழ், சவூதி அரபியா ஓசோன் அடுக்கை சேதப்படுத்தும் அனைத்து வகை பொருள்களையும் 100 வீதம் அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இது, சர்வதேச தரநிலைகள் மற்றும் சிறந்த சுற்றுச் சூழல் நடைமுறைகளைப் பின்பற்றுவதில் சவூதி அரசின் உறுதியான அர்ப்பணத்தை வெளிப்படுத்துகிறது.

பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் நீரோடு தொடர்பான சவால்களை நிவர்த்தி செய்வதற்கான அதன் வளர்ந்து வரும் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகவும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் நிலைத்தன்மையை ஊக்குவிப்பதற்கும் இராச்சியத்தின் தொலைநோக்கு 2030 இற்கு இணங்கவும், ரியாத்தை தலைமையிடமாகக் கொண்ட உலகளாவிய நீர் அமைப்பைத் தொடங்குவதில் சவூதி அரேபியா இராச்சியம் முன்னணி மற்றும் முக்கிய பங்கைக் கொண்டிருந்தது.

ஜி 20 உறுப்பினராக தனது வழிகாட்டும் பங்கை மற்றும் பொறுப்பை அடிப்படையாகக் கொண்டு, சவூதி அரபியா பசுமை பொருளாதாரத்தை கட்டியமைக்கும் முயற்சிகளை தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. இந்தப் பசுமை பொருளாதாரம், புதுமை, தொழில்நுட்பம், மற்றும் அறிவுத் திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சவூதி அரபியா தூய்மையான ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் பயனுள்ள கூட்டு முயற்சிகளை (effective partnerships) உருவாக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

சவூதியின் பொது முதலீட்டு நிதி (PIF) மற்றும் தேசிய வளர்ச்சி நிதி (NDF), சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களை ஆதரிக்க சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம், புதிய முதலீட்டுத் திட்ட வாய்ப்புகளை உருவாக்குவதிலும், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைகளில் நிலைத்த வருவாய்களை (sustainable returns) அடைவதிலும் பெரும் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.

சவூதி அரபியாவில் இதுவரை சுற்றுச்சூழல் துறையில் அடைந்துள்ள சாதனைகள், நீண்ட கால உறுதியான மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியின் தொடக்கமாகும். இது, சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஒரு விருப்பத் தெரிவு அல்ல மாறாக ஒரு அவசியமான இருப்புப்

தொடர்ச்சி ▼

# நிலைத்த எதிர்காலத்துக்கான உறுதியான அர்ப்பணிப்பு!

தொடர்ச்சி ▲

பிரச்சினை (existential necessity) என உறுதி கொண்டுள்ள தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய அரச தலைமையின் வழிகாட்டலின் கீழ் இயக்கப்படுகிறது. உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, சவூதி அரேபியா புவியைப் பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் நிலையான எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச ஒற்றுமை, நிபுணத்துவ பரிமாற்றம் மற்றும் கூட்டு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை இராச்சியம் வலியுறுத்துகிறது.



# வன்னி மாவட்டத்தில் 11 பாடசாலைகளின் மீள் கட்டுமாணப் பணிகளுக்கு அனுமதி

## காதர் மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு



(கி.வசந்தன்)

வன்னி மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த 11 பாடசாலைகளின் மீள் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று இலங்கை தொழிலாளர் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹறிணி அமரசூரிய தலைமையில் கல்வி அமைச்சு தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போதே குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்ற செயலணி ஊடாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இடை நிறுத்தப்பட்டிருந்த வன்னி மாவட்டத்தில் உள்ள 11 பாடசாலைகளின் மீள் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சரிடம் நான் கோரிக்கையை முன்வைத்திருந்தேன்.

இதன்போது எனது கோரிக்கையை ஏற்று அதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்து தருவார் என்று உறுதியளித்துள்ளார்.

இதன் மூலம் வன்னி மாவட்டத்தில் 11 பாடசாலைகளின் கட்டுமாகப் பணிகள் மீள இடம்பெறவுள்ளன. இது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்கும்.- என்றார்.

# கிழக்கு மாகாணத்தில் 30 சபைகளுக்கான தவிசாளர் தெரிவுக்கூட்டங்கள் விவரம்

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அஸ்மி அறிவிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத 30 சபைகளுக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக் கூட்டங்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஜுலை 02 வரை நடைபெறவுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார் .

இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் பத்திரிகை விளம்பரமும் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை முதல் அட்டாளைச்சேனை பிரதேச சபை வரை 30 சபைகளுக்கு தவிசாளர் உப தவிசாளர் தெரிவு இடம் பெறும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் தெரிவுக் கூட்டங்கள் தொடர்பாக கேட்ட பொழுது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் 45 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. அவற்றில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த 44 சபைகளுக்கு அண்மையில் தேர்தல் இடம்பெற்றது.



தெரிவான உறுப்பினர்களுக்கான உறுப்புரிமை வர்த்தமானி அறிவித்தலின்படி ஜுன் மாதம் 02 ஆம் திகதி கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் போதுமான அறுதிப் பெரும்பான்மை இல்லாமல் தொங்கு நிலையில் 30 சபைகள் உள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 12 சபைகளும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் தலா 09 சபைகளும் இவ்விதம் உள்ளன.

அந்தச் சபைகளுக்கான தவிசாளர் உப தவிசாளர் தெரிவானது எனது தலைமையில் அந்தந்த சபைகளில் மேற்குறித்த அறிவிப்பின் பிரகாரம் நடைபெறும். - என்றார்.



# ஆளுனர் தலைமையில் சுற்றாடல் வார நிகழ்வு!

**(ஏ.எச்.ஹஸ்பர், அபு அலா)**

தேசிய சுற்றுச்சூழல் வாரத்துடன் இணைந்து, தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் திருகோணமலை நகரம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளை சுத்தம் செய்யும் நிகழ்வு நேற்று (04) கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், கிழக்கு மாகாண சபையின் நிறுவனத் தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் இளைஞர் கழகங்களை ஸ்தாபியுங்கள்

## நோர்வூட் பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் தோட்டங்கள் தோறும் இளைஞர் கழகங்களை ஸ்தாபிக்குமாறு வழியுருத்தி மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் தேசிய இளைஞர் விவகார அமைச்சு இணைந்து கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான மகஜர் நோர்வூட் பிரதேச செயலாளரிடம் நேற்று (04) புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரை நுவரெலியா மாவட்ட நோர்வூட் இளைஞர் கழக சம்மேளனம் கையளித்தது.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் நோர்வூட் பகுதியில் உள்ள வீ.கே. வெள்ளையன் இளைஞர் கழகம் செயற்பட்டுவருகிறது. எங்கள் இளைஞர் கழகத்துக்கான இரண்டு ஏக்கர் காணியை ஜனாதிபதி பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் ஊடாக புதிய சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு இளைஞர் கழகம் மாத்திரம் அமைக்கப்பட வேண்டும என்ற புதிய சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த முறைமை மலையக பகுதியை தவிர்ந்த ஏனைய பகுதிக்கு அது பொருத்தமானதாக இருக்கும்.

மலையக மக்கள் செறிந்து வாழுகின்ற - மலையக இளைஞர்கள் அதிகமாக காணப்படுகின்ற இந்த மலையக பகுதிக்கு இந்தச் சுற்று நிருபம் பொருந்தாது. மலையக இளைஞர்களை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கும் சுற்று நிருபமாக இது உள்ளது.

இந்தச் சுற்று நிருபத்தை மீள் திருத்தம் செய்து தோட்டப் புறங்கள் தோறும் இளைஞர் கழகங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு இளைஞர் விவகார அமைச்சும் ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்க வேண்டு.- என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# மன்னாரில் இராணுவத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் மற்றும் இராணுவத்தினருக்கு இடையிலான நல்லிணக்கத்தை அதிகரிக்கும் முகமாக தள்ளாடி 54 ஆவது காலாட்படை பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வன்னி பிராந்திய கட்டளையிடும் தளபதி கரப்பந்தாட்ட வெற்றி கிண்ண இறுதி நிகழ்வு நேற்று (4) புதன் கிழமை மாலை மன்னார் நகர சபை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய அணிகளும இரண்டு இராணுவ அணிளும் மோதிய இந்தச் சுற்றுப் போட்டியில் மன்னார் பிரதேச செயலக அணி மற்றும் தள்ளாடி இராணுவ பி அணியும் இறுதி போட்டிக்கு தெரிவாகிய நிலையில் அவர்களுக்கான போட்டி நேற்று இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் மன்னார் பிரதேச செயலக அணியை ராணுவ அணியினர் வென்று 50 ஆயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் பதக்கங்களையும் அதே நேரம் வன்னி கட்டளையிடும் தளபதி வெற்றி கிண்ணத்தையும் தமதாக்கிக் கொண்டனர்.

இரண்டாம் இடம்பெற்ற மன்னார் பிரதேச செயலக அணிக்கு 25 ஆயிரம் ரூபா பணப் பரிசும் பதக்கங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வன்னி பிராந்திய தலைமை கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் பிரதீப் குலதுங்க , சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள், இராணுவ தளபதிகள், உதவி திட்டமிடல் பணிப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக விளையாட்டு துறையை ஊக்குவிக்கும் முகமாகவும், இராணுவம், பொதுமக்கள், அரச அதிகாரிகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பல்வேறு நிகழ்வுகள் இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது .







# வைத்தியசாலை பொறுப்பதிகாரிக்கு மன உளைச்சல் வழங்கும் அதிகாரி!

## கண்டித்து நீதிகோரி வைத்தியசாலை பொறுப்பதிகாரி உண்ணாவிரதம்

**( வாஸ் கூஞ்ஞ)**

வைத்தியசாலையில் தான் ஒரு பொறுப்பதிகாரியாக இருந்துக் கொண்டு வைத்தியசாலையை அபி விருத்தி செய்வதற்கான நடவடிக் கையையோ நிர்வாகத்தை நடத் தவோ இடையூறு செய்யும் அதி காரி ஈற்றில் சம்பளத்திலும் கைவைத் துள்ளார் என்ற மன உளைச்சலுக்கு உள்ளாகிய பேசாலை வைத்திய சாலை பொறுப்பதிகாரி நீதி கிடைக் கும் வரை உண்ணாவிரதப் போராட் டத்தில் இறங்கியுள்ளார்.

இந்த சம்பவம் இன்று வியாழக் கிழமை (05) மன்னார் பேசாலை பிர தேச வைத்தியசாலையில் இடம்பெற் றுள்ளது.

இது தொடர்பாக உண்ணாவிர தப் போராட்டத்தில் இருந்து வரும் பேசாலை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இம்மனுவேல் ஈற்றன் பீரிஸ் தெரி விக்கையில்,

இன்று பல வைத்தியர்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதால் வைத்தி யர்கள் பற்றாக்குறைகள் நிலவி வரு கின்றபோதும் தான் எமது மக்க ளுக்கு குறிப்பாக மன்னார் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற குறிக் கோளுடன் மன்னார் பொதுவைத் தியசாலையில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பின் எனது சொந்த கிராம வைத்தியசாலையில் கடமை யாற்றி பேசாலை பிரதேச வைத்திய சாலையை மேம்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் கடந்த ஐந்து வரு டங்களாக கடமையாற்றி வருகின் றேன்.

இந்த நிலையில் இந்த வைத்திய சாலையில் ஆறு மாதங்களாக குடி தண்ணீர் அற்ற நிலை காணப்படு கின்றது.

இங்கு எனது நிர்வாகத்தின் கீழ் கடமை புரியும் ஊழியர்கள் தவறு இழைக்கும்போது அவற்றைச் சுட்டிக் காட்டிச் சீர்திருத்த முற்படும்போது, எனக்கு எதிராக மன்னார் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் முறையீடு செய்வது வழமை. இவை தொடர்பாக விசாரணைகள் நடந்து எனக்கு சாதகமாக தீர்ப்புகள் வந்தா லும் அவற்றை கவனத்தில் கொள்ளாது இந்த அதிகாரி ஒருபக்க சார்பாக இருந்து செயற்படுவதால் தனக்கு கீழ் பணி புரியும் சிலர் தான்தோன்றித் தனமாக செயற்பட்டு வருகின்றனர்.

மின்சாரக் கட்டணங்கள் இவ்வைத் தியசாலையில் உயர்ந்து வருவதாக இந்த சம்பந்தப்பட்ட அதிகாரி தனக்கு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, நான் இது தொடர்பாக கவனம் செலுத்தி பணியாளர்களிடம் சுட்டிக்காட்டி தேவை யற்ற முறையில் ஏசி பாவனையில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்டேன். இதையிட்டு கவனம் செலுத்தாது என்மீதே இந்த அதிகாரி நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளார்.

அதாவது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் 11.05.2025 அன்று பேசாலை வைத் தியசாலைபொறுப்பதிகாரியாகியஎனக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், சடுதி யானதும் நியாயமற்றதுமான மின் அதிகரிப்பு ஏற்படும் பட்சத்தில் மேலதிக அதிகரிப்புக்கான கட்டணத்தை பொறுப் பதிகாரியிடமே அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இவ்வாறான நிலையில் இந்த வைத்தியசாலையில் ஆறு மாதங்களாக குடி தண்ணீர் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும் அந்த அதிகாரி இது தொடர்பில் கவனதம் செலுத்தவில்லை.

இங்கு தவறு இழைக்கப்படும் பணி யாளர்கள் தொடர்பாக கவனத்துக்கு கொண்டு சென்று விசாரனைகள் நடை பெற்று எனக்கு சாதகமாக காணப்பட்ட போதும் அவற்றை தெரியப்படுத்தாது பணியாளர்கள் பொறுப்பதிகாரிக்கு பணியாத நிலையை உருவாக்கி வைத் துள்ளார்.– என்றார்.

# நடிகர் சங்கத்துக்கு தேர்தலால் கட்டுமான பணிகள் பாதிக்கும்

## உயர் நீதிமன்றத்தில் நடிகர் விஷால் பதில் மனு

நடிகர் சங்கத்துக்கு தேர்தல் நடத்தினால் கட்டுமானப்பணிகள் பாதிக்கப்படும் என்பதால் சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என நடிகர் விஷால் உயர் நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

தென்னிந்திய நடிகர் சங்கத்துக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

கடந்த 2022 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களின் பதவிக்காலம் கடந்த மார்ச் 19 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில் அவர்களின் பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பது என கடந்தாண்டு செப்டெம்பர் 8 இல் நடந்த நடிகர் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதை எதிர்த்து நடிகர் நம்பிராஜன்



என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் தென்னிந்திய நடிகர் சங்க பொதுச்செயலாளரான நடிகர் விஷால் சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் அவர் தெரிவித்துள்ளதாவது: -

நடிகர் சங்கத்துக்கு 25 கோடி இந்திய ரூபா செலவில் புதிதாக கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு 60 சதவீத பணிகள் முடிவடைந்து விட்டன. தங்களது பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிந்துவிட்டது என்றாலும், 2025 - 2028 காலகட்டத்துக்கான புதிய நிர்வாகிகளை தேர்வு செய்வதற்கான தேர்தல் பணிகளை தொடங்கினால் அது சங்க கட்டுமானப் பணிகளை பாதிக்கும்.

எனவே சங்க பொதுக்குழு மற்றும் செயற்குழுவில் தற்போதைய நிர்வாகிகளின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து ஏகமனதாக தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பொதுக்குழுவுக்கே உச்சபட்ச அதிகாரம் உள்ளது. இதில் எந்த வொரு விதிமீறலும் இல்லை. அதற்கான ஆவணம் முறைப்படி பதிவுத்துறை பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு உள்நோக்கத்துடன் தொடரப்பட்டுள்ளது என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.” இவ்வாறு கோரியிருந்தார்.

அதையடுத்து இந்த வழக்கின் விசாரணையை நீதிபதி கே.குமரேஷ் பாபு ஜூன் 9 திகதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

# பேச்சு சுதந்திரத்துக்கு வரம்பு உள்ளது; ராகுல் காந்திக்கு நீதிமன்றம் கண்டனம்

இந்திய இராணுவம் குறித்து அவதூறாகப் பேசினார் என தொடரப்பட்ட வழக்கில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு அலகாபாத் உயர் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. பேச்சு சுதந்தித்திற்கு வரம்புகள் உள்ளதாக நீதிமன்றம் கூறியுள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பாரத் ஜோடோ யாத்திரை மேற்கொண்டபோது இந்திய இராணுவம் குறித்து அவதூறாக பேசினார் என குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் ராகுல் காந்தி நேரில் ஆஜராக உ.பி.யின் லக்னோ நீதிமன்றம் உத்தர



விட்டது.

இதற்கு எதிராக அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி வழக்கு தொடர்ந்தார். இதில் கீழமை நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை மறுத்துவிட்டது. விரிவான தீர்ப்பு அடுத்த வாரம் வழங்கப்படும் என்று தெரிவித்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் ராகுல் காந்தியின் கோரிக்கையை நீதிபதி சுபாஷ் வித்யார்த்தி நேற்று நிராகரித்தார்.

அப்போது அவர், “அரசமைப்பு சட்டத்தின் 19(1)(ஏ) பிரிவானது பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்தை உறுதி செய்கிறது. என்றாலும் இந்த சுதந்திரம் நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. இராணுவம் பற்றி அவதூறாகப் பேசுவதற்கு இந்தப் பிரிவு பாதுகாப்பு அளிக்காது.” என்றார்.

# ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பாகிஸ்தானின் 9 விமானங்கள் அழிப்பு

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய இராணுவம் ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடுமையான பதிலடியை கொடுத்தது. அப்போது, பாகிஸ்தானுக்கு சொந்தமான 9 விமானங்கள் அழிக்கப்பட்டன.

மே மாத தொடக்கத்தில் இந்திய இராணுவம் ஒபரேஷன் சிந்தூரை தொடங்கிய பிறகு பாகிஸ்தானின் வான்வழி மற்றும் தரைவழி இராணுவ சொத்துகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது.



வான்வழி தாக்குதல் நடவடிக்கைகளின்போது பாகிஸ்தான் விமானப் படைக்கு சொந்தமான 6 விமானங்கள் குண்டு வீசி தகர்க்கப்பட்டன. மேலும், இரண்டு உயர்திறன் கண்காணிப்பு விமானங்கள் அழிக்கப்பட்டன. ட்ரோன் மூலம் குறிப்பிட்ட இலக்கை தாக்குவதன் மூலம் சி-130 ஹெர்குலில் போக்குவரத்து விமானம் அழிக்கப்பட்டது.

ஒட்டுமொத்தமாக பாகிஸ்தானுக்கு சொந்தமான 9 விமானங்கள் ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது முற்றாக தகர்க்கப்பட்டன. உயர் மதிப்பு கண்காணிப்பு பிரிவில் பாகிஸ்தானின் 2 விமானங்களை இந்திய இராணுவம் குறிவைத்து தாக்கி அழித்தது நான்கு நாள் நடைபெற்ற போரில் முக்கிய சம்பவமாக பார்க்கப்படுகிறது.

# 12 நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு பயணம் செய்வதற்குத் தடை விதிப்பு

12 நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குப் பயணம் செய்வதற்குத் தடை விதிக்கும் வகையிலான உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அதற்கமைய, ஆப்கானிஸ்தான், பர்மா, சாட், கொங்கோ குடியரசு, எக்குவடோரியல் கினி, எரித்திரியா, ஹெயிட்டி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன் ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கே அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, புருண்டி, கியூபா, லாவோஸ், சியேரா லியோனி, டோகோ, துருக்மெனிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய 7 நாடுகளுக்கும், அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதற்குப் பகுதி பயணக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த கட்டுப்பாடுகள் அமெரிக்கர்களை, ஆபத்தான வெளிநாட்டவர்களிடமிருந்து பாதுகாக்கும் என வெள்ளை மாளிகை கூறுகிறது.

சில நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணம் செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் இரண்டாவது முறையாக இத்தகைய தடை விதிக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில், முன்னதாக ஜனாதிபதியாக இருந்தபோது இதே போன்ற உத்தரவில் அவர் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.





# கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி, ரயில் பாதைகள் தகர்க்கப்பட்டன

## உக்ரைன் இராணுவம் தகவல்

கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி மற்றும் ரயில் பாதையை தகர்த்து விட்டோம் என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் முக்கிய 5 விமான படைத் தளங்கள் மீது உக்ரைன் இராணுவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே நேரத்தில் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது. 'ஒபரேஷன் ஸ்பைடர் வெப்' என்ற இரகசிய குறியீடுடன் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ரஷ்யாவின் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கக் கூடிய 41 அதிநவீன போர் விமானங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

இந்நிலையில், உக்ரைன் இராணுவம் (உள்நாட்டு பாதுகாப்பு முகமை) நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

"கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் வீதி, ரயில் பாதைகளை உள்ளடக்கிய மேம்பாலத்தை தகர்த்து விட்டோம். இதற்காக 1,100 கிலோ எடை கொண்ட வெடிபொருள்களை பயன்படுத்தினோம். இந்த தாக்குதலில் தண்ணீருக்கடியில் இருந்த பாலத்தின் தூண்கள் சேதமடைந்துள்ளன" என கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து ரஷ்ய உயர் அதிகாரி கூறும்போது, "கிரைமியாவுக்கு செல்வதற்கான பாலத்தில் 3 மணி நேரத்துக்கு மட்டும் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதன் பிறகு பாலத்தில் வாகனப் போக்குவரத்து வழக்கம் போல அனுமதிக்கப்பட்டது." என்றார்.

உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரைமியாவை கடந்த 2014 ஆம் ஆண்டு ரஷ்யா ஆக்கிரமித்தது. தீவுப் பகுதியான கிரைமியாவையும் ரஷ்யாவையும் நேரடியாக இணைக்க 19 கி.மீ. தூரம் கொண்ட ஒரே ஒரு பாலம் மட்டுமே உள்ளது. இது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் குறிப்பிடத்தக்க திட்டமாகும். இதில் வீதி மற்றும் ரயில் என இரு தனித் தனி பாதைகள் உள்ளன.

இந்த பாலத்தை கொன்கிரீட் தூண்கள் தாங்கி நிற்கின்றன. கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்ய இராணுவம் இந்த பாலத்தின் வழியாகத்தான் உக்ரைனுக்குள் முதல் முறையாக ஊடுருவியது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய அதிபர் புடினுடன் நல்ல உரையாடல் நடந்தது

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



உக்ரைனின் சமீபத்திய ட்ரோன் தாக்குதல் மற்றும் ஈரான் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ஒரு நல்ல உரையாடல் நடந்ததாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவிற்குள் உக்ரைனின் மிகப் பெரிய ட்ரோன் தாக்குதலைத் தொடர்ந்து, ரஷ்யா விமானநிலையங்கள் மீதான சமீபத்திய தாக்குதலுக்கு பதிலளிக்க வேண்டும் என்று புடின் தன்னிடம் கூறினார் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த தொலைபேசி அழைப்பு உடனடி அமைதிக்கு வழிவகுக்காது என்றும் ட்ரம்ப் ஒரு சமூக ஊடகப் பதிவில் எச்சரித்தார்.

இரு தலைவர்களும் ஈரான் குறித்தும் விவாதித்தனர். மேலும் புடின் அந்த நாட்டுடனான அணுசக்தி பேச்சுவார்த்தைகளுக்கு உதவ முடியும் என்று தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

பக்கம் 03

வியாழக்கிழமை 05/06/2025

## புலம்பெயர்தல் தொடர்பில் கனடாவில் புதிய சட்டமூலம்

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்த சட்டம் ஒன்றைக் கொண்டுவர கனடா அரசு திட்டமிட்டுவருகிறது.

சில புகலிடக் கோரிக்கைகளை கட்டுப்படுத்துதல் மற்றும், புலம்பெயர்தல் பரி 02▶



# கனடாவின் காட்டுத்தீயால் அமெரிக்காவில் புகை பாதிப்பு

கனடாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயால் ஏற்பட்ட புகை, அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் காற்றின் தரத்தை புதன்கிழமை முதல் மோசமாக்கி வருகிறது என அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த காட்டுத்தீயால் பல ஆயிரக் கனடா குடிமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த புகை ஐரோப்பாவிற்கு கூட பரவியுள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்காவில், மத்திய மேற்கு பகுதியில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கான்சாஸ் சிட்டி முதல் மினியாப்பொலிஸ் வரை பல நகரங்களில் புகை வானை மூடிய நிலையில் உள்ளது.

அந்த பகுதியில் காற்றுத் தூய்மைத்தரக் குறைபாடுகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கரின் அயோவா மாநிலம் முழுவதும் காற்று தர எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது (வியாழன் காலையில் முடிவடையும் வரை). பொதுமக்கள் வெளியே செயற்படுவதை குறைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விஸ்கான்சின் மாநிலத்திலும் இதேபோல் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன, புகை தெற்கே பரவுவதால். மிசிகனில், மக்கள் ஜன்னல்களை மூடுமாறும், வெளிப்புற உடற்பயிற்சிகளை தவிர்க்குமாறும், மூச்சுத்திணறல் ஏற்பட்டால் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# கனடாவில் பாரிய போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 23 பேர் கைது

கனடாவின் ரிச்மண்ட் ஹில் பகுதியில் பென்டனில் போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கி வியாபாரத்தில் ஈடுபட்ட ஒரு முக்கிய குற்றவாளி குழுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

'ப்ராஜெக்ட் சாட்டர்' என்ற பெயரிலான 7 மாத விசாரணையின் முடிவாக, 23 பேர் மீது 330 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசாரணை கடந்த 2024 ஒக்டோபரில் தொடங்கப்பட்டது. இவ் விசாரணையின் போது டொரண்டோ பெரும்பாகம் முழுவதும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட கும்பலைத் தேடி விசாரணை நடத்தப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு நுணுக்கமான மற்றும் சிறப்பாக திட்டமிடப்பட்ட குற்றவாளிகளின் வலையமைப்பாக இருந்தது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பலரை கண்டறிந்து கொள்ள முடிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

200 இற்கும் மேற்பட்ட பொலிஸார் இணைந்து, 15 இடங்களில் சோதனை நடத்தியுள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் 23 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக 330 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. சந்தேக நபர்களிடமிருந்து 32 சட்ட விரோத துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.



## புலம்பெயர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீலிப்பதை நிறுத்த அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் தொடர்பிலான ஒரு சட்டமூலத்தை கனடா அரசாங்கம் முன்வைத்துள்ளது.

கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சரான லீனா டயப் கூறும்போது, "வலிமையான எல்லைகள்' சட்டமானது, திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் குற்றங்களையும், சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் நாட்டுக்குள் நுழைவதை கட்டுப்படுத்துவதையும், நாட்டின் புலம்பெயர்தல் அமைப்பின் ஒருமைப்பாட்டை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது." என்றார்.

இந்த சட்டத்தின் மூலம், அமெரிக்காவுடனான கனடாவின் பகிரப்பட்ட எல்லையைக் கண்காணிக்க பொலிஸாருக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட உள்ளது.

இன்னொரு முக்கிய விடயம், இந்தச் சட்டம், கனடாவில் ஒரு வருடத்திற்கு மேலாக தங்கியிருப்பவர்கள் புகலிடம் கோருவதைத் தடுக்கக்கூடும்.

அதாவது, கனடாவுக்கு வந்தவர்கள், 14 நாள்களுக்குள் புகலிடம் கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

அப்படி விண்ணப்பிக்காமல், ஒரு வருடத்துக்கும் மேல் கனடாவில் தங்கியிருப்பவர்கள், அதற்குப்பின் புகலிடம் கோர தடை விதிக்கப்படுவதுடன், அவர்கள் நாடுகடத்தப்படவும் வாய்ப்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.







# காதலியுடன் சேர்ந்து முன்னாள் மனைவியை கொலை செய்த நபருக்கு ஆயுள் தண்டனை?

கனடாவின் மொன்றியலில், தன் புதிய காதலியுடன் சேர்ந்து தன் முன்னாள் மனைவியை கொலை செய்ததாக நபர் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு மே மாதம், ஓட்னா (வயது 32) என்னும் பெண் Rivière-des-Prairies என்னுமிடத்தில், தனது காரில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

இந்த வழக்கில் தற்போது ஓட்னாவின் முன்னாள் கணவரான ஜாக் மற்றும் அவரது புதிய காதலியான மெலிஸ்ஸா ஆகியோர் குற்றவாளிகள் என நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

விடயம் என்னவென்றால், ஓட்னா எப்படி உயிரிழந்தார் என்பது இதுவரை தெரியவில்லை. என்றாலும், அவரது முன்னாள் கணவரான ஜாக் மற்றும் அவரது காதலி குற்றவாளிகள் என நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

ஜாக்கும் ஓட்னாவும் பிரிந்தாலும், ஓட்னாவை விடமுடியாமல் அவரையே எப்போதும் பின்தொடர்ந்துள்ளார் ஜாக். ஆக, முன்னாள் மனைவியை விடமுடியாமல் தவித்த ஜாக், தனது காதலியுடன் சேர்ந்து அவரைக் கொல்ல முடிவு செய்துள்ளார்.



அதன்படி, உடற்கூறு ஆய்வில் கண்டுபிடிக்கமுடியாத ஒரு விஷத்தை ஓட்னாவுக்குக் கொடுத்து, அவரது காரிலிருந்த ஜி.பி.எஸ். மூலம் அவரைப் பின்தொடர்ந்து, அவரைக் கொன்று அவரது உடலை Rivière-des-Prairies என்னுமிடத்தில் போட்டனர் என ஜாக் மற்றும் மெலிஸ்ஸா மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சி.சி.ரி.வி. கமெராக்கள் மற்றும் மொபைல் டேட்டா மூலம் அவர்களுடைய குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளார்கள்.

அவர்களுக்கு 25 ஆண்டுகளுக்கு பிணையில் வர இயலாத வகையில் ஆயுள் தண்டனை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவின் வரி விதிப்பால் உருக்கு உற்பத்தியாளருக்கு பாதிப்பு

## ஹாமில்டன் நகர மேயர் தெரிவிப்பு



அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் கனடாவின் ஹமில்டன் நகர மேயர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், உருக்கு மற்றும் அலுமினியத்திற்கு விதிக்கப்பட்ட வரிகளை இரட்டிப்பாக்கியிருப்பது கனடாவின் மிகப் பெரிய உருக்கு உற்பத்தியாளருக்கு பேரழிவாக அமையும் என ஹாமில்டன் நகர மேயர் ஆண்ட்ரியா ஹார்வத் தெரிவித்துள்ளார்.

இது ஹாமில்டனுக்கே கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இங்குள்ள நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் பெரும் பாதிப்பாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான உருக்கு உற்பத்தி நிறுவனங்கள் ஹாமில்டனில் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கனடா, 2023ஆம் ஆண்டில், அமெரிக்காவுக்கான உருக்கு இறக்குமதியில் 25 வீத பங்கு வகித்த மிகப் பெரிய விநியோகஸ்தராக இருந்தது என சுட்டிக்காட்டியுள்ளார்.

செவ்வாயன்று ட்ரம்ப் கையெழுத்திட்ட நிர்வாக உத்தரவின் அடிப்படையில், இரும்பு மற்றும் அலுமினியத்திற்கு விதிக்கப்பட்ட 25 வீத வரி 50 வீதமாக உயர்த்தப்பட்டது.

இது நிறுவனங்களுக்கு மிகப் பெரிய சுமையாக இருக்கலாம் என ஹார்வத் தெரிவித்தார்.

மார்ச்சில் வரிகள் முதன்முதலில் விதிக்கப்பட்டபோது நிறுவனங்கள் அதனை குறுகிய காலத்தில் தாங்கக் கூடியதாக கூறின. ஆனால் தற்போது உயர்த்தப்பட்ட வரி பேரழிவை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியுள்ளார்.